முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

முன்னிலை-திரு.சி.குமாரவர்மன், எல்.எல்.எம்.,

முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு.

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02ஆம் நாள் புதன்கிழமை

**E.P.No.25/2024 in O.S.No.14/2022**

**CNR.No.TNTM-04-000219-2024**

வளர்நேசன் ... மனுதாரர்

/எதிராக/

1.ஸ்டெல்லா ... எதிர்மனுதாரர்

2. முதல்வர் அவர்கள்,

அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் (மகளிர்)

கிண்டி, சென்னை. ... Garnishee

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக 27.01.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.நடராஜன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் மற்றும் Garnishee மனு அறிவிப்பிற்கு பிறகும் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்தும் மனுதாரர் தரப்பு வாதுரைகளைக் கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவு

1-ம் எதிர்மனுதாரரின் சம்பளத்தை பற்றுகை செய்து தீர்ப்பாணை தொகையை வசூலிக்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்

மனுவில் மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர். கடன் தொகையை வசூலிக்க அசல் வழக்கு எண்.14/2022 வழக்கை தாக்கல் செய்து வழக்கில் 24.08.2023 ஆம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. எதிர்மனுதாரர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்

(மகளிர்) கிண்டி, சென்னையில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து வருகிறார். எதிர்மனுதாரர் தீர்ப்பாணை படி தொகையை செலுத்தவில்லை. எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பி தீர்ப்பாணை தொகையை செலுத்தவில்லை என்றால் எதிர்மனுதாரரின் சம்பளத்தை பற்றுகை செய்து தீர்ப்பாணை தொகையை வசூலிக்க உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென மனுதாரர் மனுவில் கூறியுள்ளார்.

2. எதிர்மனுதாரர் மற்றும் Garnishee மனு அறிவிப்பை பெற்றுக்கொண்டும் அழைத்தும் ஆஜராகாததால் 27.11.2024ஆம் தேதி ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

3. இம்மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால்,

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

4. மனுதாரர், எதிர்மனுதாரர் மற்றும் Garnishee தரப்பில் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை.

5. மனுதாரர்/தீர்ப்பாணைபெற்றவர் கடன் தொகையை வசூலிக்க அசல் வழக்கு எண்.14/2022 வழக்கை தாக்கல் செய்து வழக்கில் 24.08.2023 ஆம் தேதி தீர்ப்பாணை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை மனுவுடன் தாக்கல் செய்துள்ள தீர்ப்பாணையின் சான்று நகல் மூலம் அறிய முடிகிறது.

6. உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 60ல் " [1](1) The following property is liable to attachment and sale in execution of a decree, namely, lands, houses or other buildings, goods, money, bank-notes, cheques, bills of exchange, hundis, promissory notes, Government securities, bonds or other securities for money, debts, shares in a corporation and, save as hereinafter mentioned, all other saleable property, movable or immovable, belonging to the judgment-debtor, or over which, or the profits of which, he has a disposing power which he may exercise for his own benefit, whether the same be held in the name of the judgment-debtor or by another person in trust for him or on his behalf:

Provided that the following particulars shall not be liable to such attachment or sale, namely:

[(i) salary to the extent of [9] [the first [10] [one thousand rupees] and two third of the remainder] [11][in execution of any decree other than a decree for maintenance]:
[12][Provided that where any part of such portion of the salary as is liable to attachment has been under attachment, whether continuously or intermittently, for a total period of twenty-four months, such portion shall be exempt from attachment until the expiry of a further period of twelve months, and, where such attachment has been made in execution of one and the same decree, shall, after the attachment has continued for a total period of twenty-four months, be finally exempt from attachment in execution of that decree. ]] " என சொல்லப்பட்டுள்ளது.

7. மனு தொகை ரூ.6,31,079.93/- ஆகும். மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் சம்பள சான்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரரின் 2024ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களுக்கான சம்பளச் சான்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் ஆகஸ்டு மாதம் நிகர சம்பளமாக ரூ.52,772/- பெற்றுள்ளார் என்பதை அறியமுடிகிறது. அதில் முதலில் ரூ.1000/- கழிக்க வேண்டும். அவ்வாறு கழித்தால் ரூ.51,772/- ஆகும். எதிர்மனுதாரர் சம்பளத்தில் மாதம் ரூ.25,000/-ஐ 24 மாதங்களுக்கு பற்றுகை செய்யலாம். ஆதலால் மேற்சொன்னவாறு எதிர்மனுதாரர் சம்பளத்தை பற்றுகை செய்து உத்தரவு பிறப்பிக்கலாம் என தீர்மானித்து இம்மனு பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, மனுதாரர் மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு முதல்வர் அவர்கள், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் (மகளிர்) கிண்டி, சென்னை அவர்கள் எதிர்மனுதாரர் ஸ்டெல்லா சம்பளத்தில் 24 மாதங்கள் மாதம் ரூ.25,000/-ஐ பற்றுகை செய்தும், இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02 ஆம் நாளாகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

C KUMARAVARAMAN
Digitally signed by C KUMARAVARAMAN

முதன்மை சார்பு நீதிபதி,
செய்யாறு.

E.P.No.25/2024 in O.S.No.14/2022 Dated.02.04.2025.

<u>மனுதாரர்.எதிர்மனுதாரர் தரப்பு   சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் -</u>

இல்லை.

C KUMARAVARAMAN Digitally signed by C KUMARAVARAMAN

முதன்மை சார்பு நீதிபதி,
செய்யாறு.